ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-7-2019), வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-23 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்-ஆங்கிலம்)

36. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

65. மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

66. மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை (பெருந்தொழில்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

67. மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை (சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

68. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2019-2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

69. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019-2020. (தமிழ்)

70. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019-2020. (தமிழ்)

71. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019-2020. (தமிழ்)

72. தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2019-2020. (தமிழ்)